# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : கஜேந்திரன் | ஜாதி | : -- |
| வயது | : 34 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**17.09.2025**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 02.08.2019ம் தேதியிட்டு என் பாட்டி மன்னேசம்மாள் என் மகன் விகேஷுக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(உயில் ஆவணம் வா.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் பாட்டி மன்னேசம்மாளின் இறப்பு சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)